சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திருமதி பா.மரகதமணி (த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு கா.பாலசுந்தரம்)– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண். 61

நாள் : 16.09.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, ஆவணி 31

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கடிதம் எண். எஸ்1(2)/8889/2019, நாள் 12.02.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.

------

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித்துறையைச் சார்ந்த கோயம்புத்தூர், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு கா.பாலசுந்தரம் கடந்த 16.09.2006 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது மனைவி திருமதி பி.மகேஸ்வரி தமது வாரிசுதாரர்/ மகளான திருமதி பா.மரகதமணி என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்க கேட்டுக் கொண்டதன் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால், திருமதி பா.மரகதமணி அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, கோயம்புத்தூர், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகத்தில் 05.09.2018 முற்பகல் முதல் பணிமேற்கொண்டு வருகிறார் என்றும், பத்தாம் வகுப்பில் மார்ச் 2002–ல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரின் பிறந்த தேதி 07.05.1987 என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள் / சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 05.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்), திருச்சி மண்டலம் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(த.பி.பா.)

4. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், திருமதி பா.மரகதமணி, இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், பணியமர்த்தப்பட்ட நாளான 05.09.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அ.சா.எண்.10737/ட்டி.1/2020–1, நாள்.04.09.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண்..21140./ஜி2/2020--1, நாள் 10.09. 2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி–20.
திருமதி பா.மரகதமணி, இளநிலை உதவியாளர்,
(தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம்,
திருச்சி–20 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை –18.

<u>நகல்:</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை/ பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

22.09.2022

பிரிவு அலுவலர்

22.9.22